**செ. கு. எண் 131** **நாள்21.09.2011**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை - 21.9.2011

---

சென்னை மாநகருக்கு குடிநீர் வழங்கும் முக்கிய நீர்த்தேக்கங்களாகிய பூண்டி, சோழவரம், செங்குன்றம், செம்பரம்பாக்கம், வீராணம் மற்றும் மீஞ்சூரில் உள்ள கடல்நீரை குடிநீராக்கும் திட்டம் ஆகிய குடிநீர் ஆதாரங்களில் இருந்து சென்னை மாநகர், தொழிற்சாலைகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் ஆகியவற்றுக்கு, நாள் ஒன்றுக்கு 790 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்படுகிறது. இதில், ஆலந்தூர் நீர் பகிர்மாண நிலையத்தில் இருந்து தென் பகுதிகளில் உள்ள உள்ளாட்சி அமைப்புப் பகுதிகளுக்கு நாள் ஒன்றுக்கு 18.75 மில்லியன் லிட்டர் குடிநீர் விநியோகிக்கப்படுகிறது.

பல்லாவரம் நகராட்சி, பம்மல் நகராட்சி, அனகாபுத்தூர் நகராட்சி, பொழிச்சலூர் கிராம ஊராட்சி ஆகிய உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் ஆலந்தூர் நீர் பகிர்மாண நிலையத்தில் இருந்து கூடுதல் குடிநீர் வழங்க வேண்டுகோள் விடுத்துள்ளனர். தற்போது சென்னை மாநகரக் குடிநீர் ஆதார ஏரிகளில் நீர் இருப்பு திருப்திகரமாக இருப்பதால், பல்லாவரம் நகராட்சிக்கு 2.50 மில்லியன் லிட்டர், பம்மல் நகராட்சிக்கு 0.20 மில்லியன் லிட்டர், அனகாபுத்தூர் நகராட்சிக்கு 0.90 மில்லியன் லிட்டர், பொழிச்சலூர் கிராம ஊராட்சிக்கு 0.40 மில்லியன் லிட்டர், ஆக மொத்தம் 4 மில்லியன் லிட்டர் குடிநீர் நாள் ஒன்றுக்கு கூடுதலாக வழங்க நான் ஆணையிட்டுள்ளேன்.

இதே போன்று பெருங்குடி நகரப் பஞ்சாயத்துக்கு உட்பட்ட மக்களின் கோரிக்கையை ஏற்று, பெருங்குடி நகரப் பஞ்சாயத்துக்கு நாள் ஒன்றுக்கு 2 மில்லியன் லிட்டர் குடிநீர் ராஜீவ் காந்தி சாலையில் உள்ள குடிநீர் வழங்கும் அமைப்பில் இருந்து வழங்கவும் நான் உத்தரவிட்டுள்ளேன்.



**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**

**ஆணையர்,** செய்தி மக்கள்
தொடர்புத்துறை, தலைமைச் செயலகம்,
சென்னை.